**மொறட்டுவ மாநகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மொறட்டுவ மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மொறட்டுவ மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதிய 4/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஆலோசனையின் படி 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது நிறுவனத்திற்குச் சொந்தமான சகல நிலையான சொத்துக்களும் மீள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்தமை உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 01 ஆந் திகதிய LGD/10A/4/நகி/2019 ஆம் இலக்க கடிதத்தில் காண்பிக்கப்பட்டுள்ள போதும் மாநகர சபையினால் 2021 ஆம் ஆண்டிலும் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக 2021 ஆம் ஆண்டின் போதும் பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 தொற்றுநோயின் காரணமாக நாட்டில் காணப்பட்ட நிலைமையினால் ஊழியர்கள் இடையிடையே சேவைக்கு அழைக்கப்பட்டமையால் சகல நிலையான சொத்துக்களையும் மீள் மதிப்பீடு செய்வதற்கு முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்படுமென அறியத் தருகின்றோம். | சகல நிலையான சொத்துக்களும் மீள் மதிப்பீடு செய்து பெறுமானத்தேய்வும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்படுகின்ற ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கணக்கு மீதி மற்றும் மூலதனத்திற்கான வருமான பங்களிப்பின் கணக்கு மீதி, ஒதுக்கம் ஏற்பாட்டுக் கணக்கின் மாற்றல்கள், சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்ததன் பின்னர் புதிய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணக் கணக்கு மற்றும் மீள் மதிப்பீட்டு ஒதுக்க கணக்கொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். எனினும் இந்த நகர சபையின் ஆதனங்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீள் மதிப்பீடு செய்யப்படாயைின் காரணமாக இந்த புதிய கணக்கீடு செய்தலும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்வதற்கு முடியாதிருந்தமையினால் மீள் மதிப்பீட்டு ஒதுக்க கணக்கை ஏற்படுத்துவதற்கு முடியாதிருந்தமை அறிவிக்கப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் மீள் மதிப்பீட்டு ஒதுக்க கணக்கை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத் தருகின்றோம். | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் புதிய கணக்கு முறைமையின் பிரகாரம் கொடுக்கல் வாங்கல் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 82,983,929 ஆன மூலதன மானிய பெறுமதியில் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களுக்கான பெறுமானத்தேய்வு வீதத்திற்கு சமமான சதவீதம் ஒன்று விரிவான வருமானக் கூற்றில் மீண்டெழும் அல்லாத செலவினத்திற்காக அரசாங்கத்திலிருந்தான கையளிப்பின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் சொத்துக்கள் பதிவேடுகளுக்கு கொண்டு வராமை மற்றும் புதிய கணக்கு முறைமையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் மூலதன மானியங்களுக்குரிய சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | இது 2021 ஆம் ஆண்டிற்கு உரித்தற்றதாகும். இந்த தொகை ரூபா 82,983,929 மீண்டெழும் செலவினத்திற்காக மாகாண சபையிலிருந்து கிடைத்த (வீதி திருத்தங்களுக்காக) ஆனமையால் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் விரிவான வருமானக் கூற்றில் குறிப்பு இலக்கம் 05 இன் கீழ் மூலதன மானியமாக காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | மூலதன வருமான பெறுமதி சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | மத்திய சந்தையின் கடை வாடகை மீதி மற்றும் பொதுச் சந்தையின் கடை வாடகை மீதி மீளாய்வாண்டில் முறையே ரூபா 301,473 மற்றும் ரூபா 130,084 பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த மீதியை தீர்த்து வைக்காமையால் மாற்றல் கொடுக்கல் வாங்கல்களில் பெறவேண்டியதன் கீழ் ரூபா 431,557 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 02 கணக்கு விடயங்களுக்குரிய மீதி அவற்றுக்குரிய பட்டோலைகளுடன் ஒப்பீடு செய்யும் போது நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,712,048 அதிகரித்தும் ரூபா 22,973,032 தொகை குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஊழியர் கடன் கணக்குகளின் மீதிக்கும் பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே காணப்படுகின்ற வேறுபாடுகளை இனங்காண்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் வேறுபாடுகளை இனங்கண்டு எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | வேறுபாடுகளை இனங்கண்டு மீதிகளை தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 84,802,768 கூட்டுத்தொகையான 09 கணக்கு விடயங்களுக்காக விரிவான பட்டோலை சமர்ப்பிக்காமையின் காரணமாக கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்கு பல வருடங்களுக்கு முன்னுள்ள நிலுவை பதிவேடு பரீட்சிக்கப்பட்ட போதும் அதில் காண்பிக்கப்பட்ட இந்த நிலுவை மீதி அவதானிக்கப்படவில்லை. அதனால் மேலும் நிலுவை பதிவேடு பரீட்சிக்கப்பட வேண்டும். | மீதியை உறுதிப்படுத்து வதற்காக தேவையான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (அ) நிதிப்பிரமாணம் 104 (3) மற்றும் (4) | இழப்பு ஒன்று ஏற்பட்டு 07 நாட்களை விட மேலதிகமாக எடுக்குமாயின் ஆரம்ப அறிக்கை, இழப்பு ஏற்பட்டு 03 மாதங்கள் கடப்பதற்கு | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் (4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முன்னர் பூரண அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்கு சொந்தமான வாகன விபத்துக்கள் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 128 | உரிய நிதி நிர்வாகத்தை பேணிச் செல்லாமையால் 2021 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மேலதிக பற்று வசதிகளுக்காக ரூபா 1,296,602 மேலதிக பற்று வட்டி சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 206(அ) பிரிவின் பிரகாரம் வங்கி மேலதிகப் பற்று வசதிகள் பெறப்பட்டிருந்ததுடன் பெறப்பட்ட வங்கி மேலதிகப் பற்று வசதிகளுக்கு வட்டி செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணம் 156 | 2003 முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு அறிக்கை மற்றும் பங்களிப்பு பணம் அனுப்புவதில் தாமதத்தின் அடிப்படையில் ரூபா 1,549,200 மிகைக் கட்டணம் செலுத்தும் பொறுப்பொன்று சபைக்கு எழுந்திருந்ததுடன் 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலத்தில் சபையினால் செலுத்தப்பட்ட ரூபா 1,088,565 ஆகும். இதற்காக பொறுப்புவாய்ந்த தரப்பினர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 156 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 156 | இலக்கம் 1329 நிதி என்ற திட்டம் அங்கீகரித்தல் தொடர்பாக சபைக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கின் போது 2018 யூலை 20 ஆந் திகதி வழங்கப்பட்ட நீதிமன்ற கட்டளையின் படி முறைப்பாட்டாளருக்கு இழப்பீட்டு பணம் மற்றும் வழக்கு கட்டணமாக சபையினால் செலுத்தப்பட்ட ரூபா 11,602,318 | அதற்குரிய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தால் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் அதன் விளைவுகளை காண்பித்து அறிக்கை இடப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 156 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொகையை அதற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.. | | |
| (உ) | நிதிப்பிரமாணம் 756 | ரூபா 964,975 பெறுமதியான எரிபொருள் இருப்பு தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எரிபொருள் இருப்பு தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வு எதிர்வரும் ஆண்டின் போது மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 136,192,585 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 24,003,920 ஆகும்.

### 2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரியும் வரியும் | | |
| (i) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252(1)(அ) மற்றும் (ஆ) பிரிவின் பிரகாரம் ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 257,771,441 ஆக இருந்ததுடன் அதில் நிலுவை ஆதனவரி பெறுமதி ரூபா 50,000 இனை விஞ்சிய 361 ஆதனவரி அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய பெறுமதி ரூபா 91,369,427 ஆகும். | மொறட்டுவ மாநகர சபை எல்லையில் உள்ள அரசாங்கத்தின் ஆதனங்களை போல வரி சலுகைகள் வழங்க வேண்டிய ஆதனவரி நிலுவையும் இந்த நிலுவை ஆதனவரி மீதியில் உள்ளது. தற்போது வரிச்சலுகை அமுல்படுத்தியிருந்ததுடன் அதன் மூலம் முடியுமான ஆதனங்களுக்காக வரிச்சலுகை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமையால் அந்த நிலுவைப் பணம் குறைவடைந்துள்ளது. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அரசாங்க ஆதனங்களுக்கான நிலுவைப் பணத்தை நீண்டகாலமாக அறவிட முடியாத நிலைமை காணப்படுகின்றது. எனினும் தொடர்ந்தும் முறையான பிரகாரம் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு மிகுதி நடவடிக்கைகளை நிறைவேற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என தயவுடன் அறியத் தருகின்றோம். | |
| (ii) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 222,516,941 ஆகவும் அதில் ரூபா 50,817,283 அதாவது 23 சதவீதம் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 171,699,658 தொகை அதாவது 77 சதவீதத்தை அறவிடுவதற்கு சபை தவறியிருந்ததுஇ. | அரசாங்க ஆதனங்களுக்கான நிலுவைப் பணத்தை போல மூடப்பட்டுள்ள வியாபார நிலையங்களுக்கான நிலுவை ஆதனவரி தொகை இந்த நிலுவைத் தொகையில் உள்ளடங்கியுள்ளது. மேலும் வரிச் சலுகை வழங்க வேண்டிய ஆதனங்களின் ஆதனவரி நிலுவை இந்த நிலுவை ஆதனவரி மீதியில் உள்ளது. தற்போது வரிச்சலுகை பெற்றுக் கொள்ளும் போது இந்த நிலுவைப் பணம் குறைவடையும். அவ்வாறே அரசாங்க ஆதனங்களுக்கான நிலுவைப் பணம் நீண்டகால ரீதியில் அறவிடப்பட முடியாத நிலைமையில் காணப்படுகின்றது. எனினும் அந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக உரிய அரசாங்க | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | நிறுவனங்களுக்கு அறிவித்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. மேலும் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக ஆதனவரி சேகரிக்கும் நடமாடும் சேவையும், தடையுத்தரவு பத்திரம் விநியோகிப்பதன் மூலம் ஆதனங்களை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதன் பிரகாரம் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு முடியுமாக உள்ளது. | |
| (ஆ) | வாடகை<br>--------------- | | |
| (i) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 அதிகாரம்) 254(அ)(1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் மாநகர சபைக்கு அறவிட வேண்டிய கொடுப்பனவுகள் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் நீண்டகாலமாக வாடகைக்கு வழங்கப்பட்ட 181 ஆதனங்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை மீதி ரூபா 3,124,678 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக கொவிட் சலுகையின் கீழ் பதிவழிப்பதற்கு குறித்துரைத்த தொகை ரூபா 522,679 ஆகும். பதிவேடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு குறித்துரைத்த நிலுவைப் பணம் ரூபா 457,453 ஆகும். தவணை ரீதியாக அறவிடுவதற்கு அறவிடப்பட்டுள்ள தொகை ரூபா 60,000 ஆகும். தற்போது 2022 ஆம் ஆண்டின் போது நிலுவையிலிருந்து அறவிடப்பட்டுள்ள தொகை ரூபா 294,882<br><br>ஆகும். அதன் பிரகாரம் மிகுதி தொகையான ரூபா 1,358,105 தொகையை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | சபைக்குச் சொந்தமான 250 ஆதனங்களில் 32 ஆதனங்களுக்காக வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. | சபைக்குச் சொந்தமான வாடகைக்கு வழங்கப்பட்ட 258 ஆதனங்கள் மத்திய சந்தையில் 08 கடைகள் வாடகைக்கு வழங்காமைக்கு 2021.12.02 ஆந் திகதி மாதாந்த சபைக் | வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கை செய்யப்பட்ட மதிப்பீடொன்றை பெற்று உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

**2.3 மிகைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புவாய்ந்த தரப்பினருக்கு எதிராக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முன்னைய ஆண்டில் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணத்திற்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 760,173 தொகை அறவிட வேண்டியிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | மிகைக் கட்டண மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆதனவரி பிரிவில் கணனியில் சேவையில் நியமிக்கப்பட்டுள்ள ஊழியரால் பொது நுழைவு இரகசிய குறியீடு (Common Pass Word) பயன்படுத்தி 2018 ஆம் ஆண்டில் 10 சந்தர்ப்பங்களின் போது ரூபா 105,893 பெறுமதியான பற்றுச்சீட்டுக்கள் இரத்துச் செய்யப்பட்டு ஆதனவரி மோசடியொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. பதவிநிலை உத்தியோகத்தருக்கு காணப்பட வேண்டிய இரகசிய நுழைவு குறியீடு (Secret Pass Word) பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முறையான பரிசோதனையொன்றை நடாத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பரிசோதனைகள் விரைவாக நடாத்தி பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து நட்டம் அறவிடப்படல் வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | என்ஜினை பழுதுபார்க்காமையினால் 14 வாகனங்கள் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்கள் நீண்ட காலம் முதல் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வாகனங்களை பழுதுபார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மொறட்டுவ மாநகர சபையின் மேற்பார்வையின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையால் நிலக்கீழ் மோட்டார் தரிப்பிடம் பொருத்தமான பொதுமக்கள் பூங்காவாக அபிவிருத்தி செய்யப்பட்ட வீரபூங்காவில் வேலை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2020 மார்ச் 13 ஆந் திகதி சபைக்கு எழுத்துமூலம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்காமல் விளைவற்று காணப்பட்டது. | தற்போது மொறட்டுவை மத்திய சந்தை நடாத்திச் செல்லப்படுகின்ற கட்டிடம் உடைந்த நிலையில் காணப்படுகின்றமையால் அதனை நவீனமயப்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையால் புதிய கட்டிடமொன்றை தாபிப்பதற்காக திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அந்தக் கட்டிடம் நிர்மாணிக்கும் போது தற்போது உள்ள மத்திய சந்தையில் காணப்படுகின்ற கடைகள் வீரபுரன் பொதுப்பூங்காவில் நிலக்கீழ் வாகன தரிப்பிடத்தில் தற்காலிகமாக தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள மையால் அந்தப் பூங்காவை பொதுமக்களுக்கு திறந்து வைப்பதற்கு முடியாதுள்ளது. | விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | உனாம வாடிவீடு அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான 0.7063 ஹெக்டயர் பரப்பளவான காணியில் மாடி வீட்டு தொகுதியொன்றுக்காக வீடமைப்பு அதிபிவிருத்தி அதிகார சபையால் கையேற்கப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பெற வேண்டிய இழப்பு பணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ஆந் திகதி வரையிலும் சபைக்கு இழப்பீட்டு பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.3 கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபைக்கு மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 20,405,393 தொகையில் எந்தவொரு தொகையும் செலுத்தப்படாதிருந்ததுடன் அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த நிலுவை ரூபா 56,839,195 ஆகும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | செலுத்த வேண்டிய பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு மேலதிகமாக செயற்திட்ட தேவைக்காக 2014 மே 29 ஆந் திகதி சேர்க்கப்பட்ட 83 ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 23,464,948 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த பதவிகள் அங்கீகரிக்க்பபட்ட பதவியணியில் காணப்படாமையின் காரணமாக சம்பளத்தை மீளளிப்புச் செய்து கொள்வதற்கு முடியாமல் சபையின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமான ஆதனங்கள் மற்றும் கட்டிங்களின் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு காவலர் ஒருவரும் பிரதேசத்தின் மக்களின் சுகாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்காக அமுல்படுத்தப்பட்ட உனாவ குடா மற்றும் டெங்கு செயற்திட்டம், மருத்துவ ஆய்வுகூட செயற்திட்டம், மதிப்பீட்டு மீள் திருத்த செயற்திட்டம் போன்றவைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு மேலதிகமாக செயற்திட்ட அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்திற்கான ஆட்சேர்ப்பிற்காக அரசாங்கத்தின் மூலம் சம்பளம் மீளளிப்புச் செய்யப்படாமையால் சபையினால் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | உள்ளுராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வேலை நீக்கம் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற 31 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 843,324 தொகையும், மரணமடைந்த மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற 14 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 390,228 தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 1,233,552 கடன் மீதி மீளாய்வாண்டின் போது அறவிடுவதற்கு தவறியிருந்தது. | வேலைநீக்கம் செய்யப்பட்ட, சேவையை விட்டுச் சென்ற, மற்றும் மரணமடைந்த உத்தியோகத்தரிட மிருந்தும், ஓய்வு பெற்றுச் சென்ற 07 உத்தியோகத்தரிட மிருந்தும் கடன் மீதியை அறவிடுவதற்கு மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | செயற்பாடற்ற கடன் மீதியில் உள்ளடங்கியுள்ள 107 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,567,846 தொகையான கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்பாடற்ற கடன் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட ஊழியர்கள்/ உத்தியோகத்தர்கள் 107 பேரிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதியை அறவிடுவதற்காக ஆவண கூடமொன்றிலிருந்து தேவையான கோவைகளை கண்டறிந்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்பாடற்ற கடன் மீதியை தீர்த்து வைத்தல் வேண்டும். |
| (ஈ) | ஊழியர் கடனை அறவிடும் போது 14 உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 99,486 தொகை மேலதிகமாக அறவிடப்பட்டிருந்தது. | ஊழியர் கடனை அறவிடும் போது 14 உத்தியோகத்தர்களிடமிருந்து மேலதிகமாக அறவிடப்பட்டுள்ள பணத்தை மீண்டும் செலுத்துவதற்காக அவர்களின் தகவல்கள் கோரப்பட்டு தாபன பிரிவிலிருந்து கிடைக்கின்ற மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மேலதிகமாக அறவிடப்பட்ட தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 வாகன பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வாகனங்களை ஓட்டத்திற்காக வருமான அனுமதிப்பத்திரம், காப்புறுதிச் சான்றிதழ் பெற வேண்டியிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான 19 வாகனங்களுக்காக வருமான அனுமதிப்பத்திரம், 13 வாகனங்களுக்கான காப்புறதி சான்றிதழும் பெறப்பட்டிருக்கவில்லை. | வாகன அனுமதிப்பத்திரம் பெறப்படாதுள்ள 22 வாகனங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. வருமான அனுமதிப்பத்திரம் பெறாத வாகனங்கள் 19 ஆகும். | வருமான அனுமதிப்பத்திரம், காப்புறுதிச் சான்றிதழ் பெறப்பட வேண்டும். |